**இலங்கை புலமைச்சொத்துக்கள் அலுவலகத்தில் வெற்றிடங்கள் நிலவும்**
**1.அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை தரம் III/II**
**2.இலங்கை தகவல்கள் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவை வகுப்பு II**
**ஆகிய பதவிகளுக்கு இணைத்துக்கொள்வதற்காக விண்ணப்பங்கள் கோரல்.**

இத்திணைக்களத்தில் வெற்றிடங்கள் நிலவும் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்காக தற்போது அரச சேவையிலுள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.மேற்படி அலுவலர்கள் கீழ்வரும் தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

I. அபிவிருத்தி உத்தியோகத்தர் - விஞ்ஞானத்துறை,சட்டத்துறை அல்லது வணிகவியல் துறையில் பட்டம் ஒன்றினைப் பெற்றுள்ள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் தரம் III/II இலுள்ள அலுவலராயிருத்தல் வேண்டும்.

II. தகவல்கள் மற்றும் தொடர்பாடல் - இணைந்த சேவையில் இலங்கை தகவல்கள் தொழில்நுட்ப அலுவலர் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையின் தரம் III/IIஇலுள்ள அலுவலராயிருத்தல் வேண்டும்.

இதற்காக தாம் சுயமாகத் தயாரித்த விண்ணப்பப்படிவம் ஒன்றினை 2014.10.05 ஆம் திகதிக்கு முன்னர் இவ்வலுவலகத்திற்கு கிடைக்கப்பெறுமாறு அனுப்பிவைக்கவும்.விண்ணப்பப்படிவத்தில், தற்போதைய சேவை நிலையத்திலிருந்து பதிற்கடமையாளர் ஒருவருடன் அல்லது ஒருவரின்றி விடுவிக்க முடியுமா என்பதனைக் குறிப்பிடுதல் கட்டாயமானதாகும்.

கீதாஞ்சலி ஆர்.ரணவக,
புலமைச் சொத்துக்கள் பணிப்பாளர் மா அதிபதி,
தேசிய புலமைச் சொத்துக்கள்அலுவலகம்,
சமாகம் மெதுர,
3 ஆவது மாடி,
கொழும்பு10.
தொ.பே.இ.011 2688768